தகவல் சட்டம் 2005
அறிவும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.17010/F/2024**

திரு மு. நரசிம்மன் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் / வட்டசார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பரமத்தி வேலூர் - 638 182, நாமக்கல் மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 03.08.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 12.09.2024 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 16.10.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 26.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு மு. நரசிம்மன் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி ச. பூங்கோதை, வட்டசார் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், பரமத்தி வேலூர் வட்டம் பரமத்தி கிராமம் நில அளவை எண்.533-க்கு, கடந்த 01.08.2023 முதல் 01.08.2024 வரை பரமத்தி வேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்ட உட்பிரிவு மற்றும் உட்பிரிவற்ற பட்டா மாறுதல்

விண்ணப்பங்களில் எத்தனை மனுக்கள் ஏற்கப்பட்டன எத்தனை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன மற்றும் எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன என்பது பற்றிய முழு விவரங்களை மொத்தம் 6 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் பரமத்தி வேலூர் வட்டம் பரமத்தி கிராமம் நில அளவை எண்.533-க்கு, கடந்த 01.08.2023 முதல் 01.08.2024 வரை பரமத்தி வேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்ட உட்பிரிவு மற்றும் உட்பிரிவற்ற பட்டா மாறுதல் விண்ணப்பங்களில் எத்தனை மனுக்கள் ஏற்கப்பட்டன எத்தனை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன மற்றும் எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன என்பது பற்றிய முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியதாகவும், இது குறித்து நாளதுவரையில் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்களை அவருக்கு முழுமையாக வழங்குவதற்கு சிறிது கால அவகாசம் வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார். ஆணையம் அதனை பதிவு செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக '**தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது**' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.17010/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / வட்டசார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பரமத்தி வேலூர் - 638 182,
நாமக்கல் மாவட்டம்.

**<u>வழக்கு எண்.SA.17010/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு மு. நரசிம்மன், த/பெ. ந. முத்துசாமி,
மனை எண்.206, கதவு எண்.16,
சிட்லபாக்கம் பிரதான சாலை,
கணேஷ் நகர், சேலையூர்,
சென்னை - 600 073.

Copy to: File
SNPS / 03.04.2025